# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 114/மா/2022**
**நாள் : 03.01.2023**

திரு. S. திருஞானம்,
சென்னை 600 001. – முறையீட்டு மனுதாரர்

செயற்பொறியாளர்,
மண்டலம் - 3,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளித் தெரு, புதிய எண்.51, பழைய எண்.81, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் 31.07.2022 நாளிட்ட மனு, 02.08.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 114/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளித் தெரு, புதிய எண்.51, பழைய எண்.81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் முறையீட்டு மனுவில்,

"சென்னை பெருநகர மாநகராட்சி, தலைமை அலுவலகத்தில் புதிய மனைப் பிரிவிற்கான அனுமதி மற்றும் பழைய மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தும் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள், பொதுப் பயன்பாட்டு நிலங்கள் மற்றும் ஒரு சில மனைப்பிரிவில் பூங்காவிற்கு அல்லது திறந்தவெளி நிலம் தானமாக வழங்கப்பட்டால்தான் மனைப்பிரிவு அனுமதி கிடைக்கும். கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை மண்டலம்-3ல், 7 மனைப் பிரிவுகளுக்கான அனுமதி வழங்கியுள்ளனர். இதில் 4 புதிய மனைப்பிரிவும் மற்றும் 3 வரன்முறை செய்யப்பட்ட மனைப்பிரிவு ஆகும். தானமாக வழங்கப்பட்ட சாலை நிலம் நீங்கலாக, பொதுப்பயன்பாட்டிற்கு மற்றும் பூங்காவிற்காக பெறப்பட்ட சுமார் 43,801 சதுர அடி நிலம் ஆகும். இதன் சந்தை மதிப்பு சுமாராக 21 கோடி ரூபாய்.

சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல் உள்ள அதிகாரிகள் மனைப்பிரிவுகளில் உள்ள தானமாக வழங்கப்பட்ட இடத்தினை இதுநாள் வரையில் சென்று பார்த்ததில்லை. ஒரு சில அதிகாரிகளுக்கு இந்த மனைப்பிரிவு எங்கு உள்ளதென்றே தெரியாது. தலைமையகத்தில் உள்ள அதிகாரிகள் மாநகராட்சி வளர்ச்சிக்கு தானமாக நிலத்தினை பெற்று தருகின்றனர். ஆனால், மண்டல அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் தனக்கு முறையற்ற முறையில் வருமானம் பெறுவதில் குறிக்கோளாக பணி செய்கின்றனர். இதே மனைப்பிரிவுள்ள புதிய கட்டிட அனுமதிக்கு முறையற்ற முறையில் வருவாய் பெற்று அனுமதி அளிக்கின்றனர்.

ஆனால், தானமாகப் பெற்ற நிலத்தினை சுவாதினம் செய்யாமலும், அதில் ஒருசில இடங்களில் மனைப்பிரிவு உரிமையாளர்களே ஆக்கிரமித்துள்ளனர். அந்த ஆக்கிரமிப்பை அகற்றாமலும், திறந்தவெளி பூங்கா மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடத்தினை, மேம்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வராத அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு, அன்புடன் வேண்டுகின்றேன்.

கீழ்காணும் மனைப்பிரிவு நில விவரங்கள்:

| மனைப் பிரிவு எண். | சென்னை மாநகராட்சி தீர்மான எண் / நாள் | சென்னை மாநகராட்சி மனைப்பிரிவு அனுமதி எண். | தான ஆவணத்தின் எண். மற்றும் சார்பதிவாளர் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | 83/2020-31.01.2020 | SD/WDCN03/00559/2019 | 4719/2020 மாதவரம் |
| 2. | 878/2020-31.10.2020 | CMDA/L/0014860/2017 | 2729/2021 மாதவரம் |
| 3. | 932/2020-16.11.2020 | CMDA/L/00007614/2017 | 6435/2020 மாதவரம் |
| 4. | 625/2021-29.07.2021 | CMDA/L/00009736/2017 | 11829/2021 அம்பத்தூர் |
| 5. | 651/2021-19.08.2021 | SD/WDCN03/00042/2021 | 5691/2021 மாதவரம் |
| 6. | 770/2021-06.10.2021 | SD/WDCN03/00433/2021 | 7163/2021 மாதவரம் |
| 7. | 854/2021-25.11.2021 | SD/WDCN03/00495/2021 | 7974/2021 மாதாவரம் |

<u>குறிப்பு:</u>

மனை உரிமையாளர் பெயர், முகவரி மற்றும் மனை அமைந்துள்ள கோட்டம், இதர விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகல்களில் உள்ளது. சென்னை பெருநகர மாநகராட்சியின் பெயரில் தான ஆவணங்கள் இருந்தபோதும், தானமாக பெற்ற இடத்தினை பெருநகர மாநகராட்சியின் பெயரில் பட்டாவை மாற்றாமல் அதிகாரிகள் செயல்படுகின்றனர்.

**2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 27.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 27.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 3–ல், கோட்டம் 23 முதல் 33 வரையில் உள்ள இடங்களுக்கு மனைப்பிரிவு வரன்முறை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கியபோது சாலைகள், பூங்கா போன்றவற்றை அமைத்திட பொதுப்பயன்பாட்டிற்கான இடம் (OSR) ஒதுக்கப்பட்டது. இவ்வாறு பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை ஒரு சிலர் ஆக்கிரமித்திட வழிவகை உள்ளது தொடர்பாக மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பப்பட்டன. ஆனால், இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மேற்கண்ட பொதுபயன்பாட்டிற்கான இடத்தில் எவ்வித அறிவிப்புப் பலகையும் அதாவது 'இந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தம்' என்கின்ற அறிவிப்புப் பலகை மாநகராட்சியால் வைக்கப்படவில்லை. மாநகராட்சி அலுவலர்கள் மாநகராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்ட நிலத்தினை சுவாதீனம் செய்யாததால், அதனை மனைப்பிரிவு உரிமையாளர்களே ஆக்கிரமிப்பு செய்திட இயலும். எனவே, மண்டலம் 3–ல் உள்ள திறந்தவெளி பூங்கா மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான இடத்தினை அறிவிப்புப் பலகை வைத்தும், வேலி அமைத்தும் முறையாக பாதுகாத்து, அதனை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 31.7.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 3, செயற்பொறியாளர் -I மற்றும் செயற்பொறியாளர் -II ஆகியோர் 27.12.2022 அன்றைய விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:**

மனுதாரர் தனது மனுவில் தெரிவித்திருந்த மண்டலம் 3–ல் 1) அசிசி நகர் 8வது தெரு 2) நடராஜ் நகர் 3) மீனாம்பாள் அவென்யூ 4) ஜெய் மாருதி நகர் 5) துரைசாமி தெரு 6) ஸ்ரீபாலாஜி அவென்யூ மற்றும் அசிசி நகர் 10 வது தெரு ஆகியவற்றில் அமைந்துள்ள 7 மனைப்பிரிவுகளில், பொது பயன்பாட்டிற்காக இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் மேலே வரிசை எண் 1ல் கண்டுள்ள அசிசி தெரு 8வது தெருவில் கண்டுள்ள இடம் தற்போது சாலையாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.. வரிசை எண் 2ல் கண்டுள்ள நடராஜ் நகரில் அமைந்துள்ள இடம் அடர்வனமாக மாற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வரிசை எண் 3, மற்றும் 7ல் உள்ள முறையே மீனாம்பாள் அவென்யூ மற்றும் அசிசி நகர் 10வது தெருவில் அமைந்துள்ள இடங்களில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலாக மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. வரிசை எண் 4ல் உள்ள ஜெய்மாருதி நகரில் உள்ள OSR இடம் தற்போது காலியாக உள்ளது. வரும் நிதியாண்டில் மதிப்பீடு தயார் செய்து பணிகள் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் வரிசை எண் 5ல் கண்டுள்ள துரைசாமி தெருவில் அமைந்துள்ள இடம் தற்போது சாலையாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது எனவும் மேலும் வரிசை எண் 6ல் கண்டுள்ள ஸ்ரீபாலாஜி அவென்யூவில் உள்ள மனைப்பிரிவு இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதற்கான விவரங்கள் மற்றும் புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மண்டலம் 3ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து OSR இடங்களிலும் "இந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தம்" என்கின்ற வாசகம் அடங்கிய அறிவிப்புப் பலகையை வைத்தும், மாநகராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப வேலி அமைத்தும் பாதுகாக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -3ன் செயற் பொறியாளர்கள் I மற்றும் IIன் வாக்குமூலம் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -3ல், கோட்டம் 23 முதல் 33 வரையில் உள்ள இடங்களுக்கு மனைப் பிரிவு வரன்முறை வழங்கப்பட்டபோது சாலைகள், பூங்கா போன்றவைகளுக்காக தானமாக வழங்கப்பட்ட இடங்களை பெருநகர சென்னை மநாகராட்சி மண்டலம்-3ன் அலுவலர்கள் மாநகராட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவில்லை என்று புகார் தெரிவித்து இருந்தார்.

மண்டல செயற்பொறியாளர்கள் தங்களது வாக்குமூலத்தில் மண்டலம்-3ல் – அசிசி நகர், துரைசாமி தெரு ஆகியவற்றில் உள்ள O.S.R. இடம் தற்போது சாலையாக பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதும், நடராஜ் நகரில் உள்ள இடம் அடர்வனமாக மாற்றப்பட்டு பயனில் உள்ளது என்பதும், மீனாம்பாள் அவென்யூ மற்றும் அசிசி நகர் 10வது தெருவில் உள்ள இடங்கள் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலாக மாற்றிட பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஜெய் மாருதி நகரில் உள்ள OSR இடம் வரும் நிதியாண்டில் மதிப்பீடு தயார் செய்து, பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஸ்ரீபாலாஜி அவென்யூயில் உள்ள மனைப் பிரிவு இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். பெருநகர சென்னை மண்டலம்-3ன் செயற்பொறியாளர் I மற்றும் II ஆகியோர்களின் வாக்குமூலம் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த போட்டோ மற்றும் அட்டவணையிலிருந்து தெரியவருகிறது.

**விரிவான விசாரணைக்குப்பின்னர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:**

மண்டலம் -3ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளில் ஒதுக்கப்பட்ட OSR இடங்களை ஆக்கிரமிப்பு செய்ய வாய்ப்பு உள்ளதால், அவ்வாறான இடங்களை சுற்றி வேலி அமைக்கவும், அவ்விடங்களில்

தெளிவாக தெரியும் வண்ணம் "இந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தமானது அத்துமீறுவோர் மீது சட்டபூர்வமான மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பெரிய அளவில் பெயர் பலகை வைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள எல்லா மண்டலங்களிலும் ஒதுக்கப்படும் OSR இடங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் பட்டா மாறுதல் செய்ய உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மனுதாரர் இம்முறைமன்றத்தில் மனு அளித்த பிறகு "பட்டா" மாறுதல் செய்ய நடவடிக்கை எடுத்த செயல் கண்டிக்கத்தக்கது.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. திருஞானம்,
புதிய எண்.51, பழைய எண்.81, திருப்பள்ளி தெரு,
சௌகார்பேட்டை, சென்னை – 600 001.
2) அரசு முதன்மை செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3) துணை ஆணையர், (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
} *He is requested to ensure the implementation of this order*
4) செயற்பொறியாளர் -I,
மண்டலம்–3, பெருநகர சென்னை மாநகராட்சி,
தட்டான் குளம் சாலை, மாதவரம், சென்னை – 600 060.
5) செயற்பொறியாளர் – II,
மண்டலம்–3, பெருநகர சென்னை மாநகராட்சி,
தட்டான் குளம் சாலை, மாதவரம், சென்னை – 600 060.
6) துணை ஆணையர்,
மண்டலம்–3, பெருநகர சென்னை மாநகராட்சி,
தட்டான் குளம் சாலை, மாதவரம், சென்னை – 600 060.
} *He is requested to ensure the implementation of this order*
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
7) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

10/01/23

செயலாளர்.

10-1-23 7/12